## 10. வெளிநாட்டு வர்த்தகமும் சுற்றுலாவும்

2000ஆம் ஆண்டு முழுவதும் இலங்கையின் ஏற்றுமதி குறிப்பிடத்தக்களவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது. எனினும், வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைந்தமைக்கு உயர்ந்த பெற்றோலிய விலைகள் மற்றும் பாதுகாப்பு இறக்குமதிகளின் அதிகரித்த செலவு என்பனவே காரணமாகும்.

### ஏற்றுமதிச் செயலாற்றம்

- ▲ 2000ஆம் ஆண்டில் இலங்கையின் ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 5,522 மில்லியனாக விளங்கி 1999இனைவிட 20 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைப்பதிவு செய்தன. புடவை மற்றும் ஆடைகள், தேயிலை, பொறிகள், எந்திர மற்றும் மின்னியல் கருவிகள், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகள், மீன் உற்பத்திகள், இரத்தினக்கற்கள், வைரங்கள் மற்றும் ஆபரண ஏற்றுமதிகள் என்பன அதற்கு முக்கியமாகப் பங்களித்தன.

ஏற்றுமதிகள் இறக்குமதிகள் மற்றும் வர்த்தக நிலுவை




வரைபடம் 10.1

- ▲ மொத்த ஏற்றுமதி வருவாய்களில் புடைவகள் மற்றும் ஆடைகள் உற்பத்தி 54 சதவீதத்திற்கு வகைகூறின. ஐக்கிய அமெரிக்கா, மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஏற்பட்ட உயர்ந்த கேள்வியின் காரணமாக புடவை மற்றும் ஆடை ஏற்றுமதிகள் 23 சதவீதத்தினால் வளர்ச்சி கண்டன.

ஏற்றுமதிகளின் உள்ளடக்கம் 2000




வரைபடம் 10.2

- ▲ இரண்டாவது பெரும் ஏற்றுமதி விடயமான தேயிலையிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 700 மில்லியனுக்கு 13 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமைக்கு ருஷ்யா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தான அதிகரித்த கேள்வியே காரணமாகும். தேயிலையின் விலை 1999இன் கி.கிறாமொன்றிற்கு ஐ.அ.டொலர் 2.30 இலிருந்து 2000ஆம் ஆண்டில் கி.கிறாமொன்றிற்கு ஐ.அ.டொலர் 2.43 இற்கு அதிகரித்தது.
- ▲ 2000ஆம் ஆண்டில் இலங்கை ஏற்றுமதிகளின் மிகப்பெரும் தனி வாங்குனராக (40 சதவீதம்) ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்தும் விளங்கியது. ஐக்கிய அமெரிக்காவிற்கான இலங்கையின் ஏற்றுமதி பெரும்பாலும்

(77சதவீதம்) ஆடையாகவே இருந்தது. இரண்டாவது பெரிய வாங்குனராக ஐக்கிய இராச்சியமும் (14 சதவீதம்), மூன்றாவது பெரிய வாங்குனராக சேர்மனியும் (4 சதவீதம்) காணப் பட்டன.

## இறக்குமதிச் செலவினம்

▲ 2000ஆம் ஆண்டில் இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொலர் 7,320 மில்லியனாக அமைந்து 1999இனைவிட 22 சதவீதங் கொண்ட அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. இது 1999இலும் 2000ஆம் ஆண்டிலும் சிறிலங்கா ஏயர்லைன் சினால் மேற்கொண்ட வானூர்திகளின் இறக்குமதிகளையும் உள்ளடக்கியிருந்தது. இரண்டாண்டுகளிலும் மேற்கொள்ளப்பட்ட வானூர்களின் இறக்குமதி நீக்கப்படுமிடத்து இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு 24 சதவீதமாக இருக்கும் 2000ஆம் ஆண்டில் வானூர்தி நீங்கலான இறக்குமதிப் பெறுமதி 1999இன் ஐ.அ.டொலர் 5,682 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 7,022 மில்லியனாகக் காணப்பட்டது.

▲ இறக்குமதிகள் நுகர்வு, இடைநிலை மற்றும் முதலீட்டுப் பொருட்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. 2000ஆம் ஆண்டில் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் 12 சதவீதத்தினால் அதிகரித்தன. இவ்வகையில் உணவுப் பொருட்களின் இறக்குமதிகள் அரிசி மீதான குறைந்த இறக்குமதிச் செலவின் தாக்கத்தினை எதிரீடு செய்த சீனி, கோதுமைத் தானியம், பால் உற்பத்திகள் மற்றும் ஏனைய உணவு விடயங்களின் உயர்ந்த இறக்குமதிகளைக் குறிக்கின்ற விதத்தில் 5 சதவீதத்தினால் அதிகரித்தன. மருந்து மற்றும் மருந்தாக்கல் உற்பத்திகள், உந்து ஊர்திகள் மற்றும் ஈருருளிகள், வானொலிப் பெட்டிகள், தொலைக் காட்சிப் பெட்டிகள் பிளாத்திக்குகள் மற்றும் அச்சிடப்பட்ட நூல்கள் போன்ற பல விடயங்கள் மீதான உயர்ந்த செலவினத்தின் காரணமாக நீண்டகால நுகர்வுப் பொருட்கள் மீதான இறக்குமதிக் கொடுப்பனவுகள் 20 சதவீதத்தினால் அதிகரித்தன.

▲ இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி மீதான செலவினம் 24 சதவீதத்தினால்

இறக்குமதிச் செலவு




வரைபடம் 10.3

சுற்றுலா வருகைகள்




வரைபடம் 10.4

அதிகரித்தமைக்கு பெற்றோலிய உற்பத்திகள் புடவைகள், வளமாக்கி, வைரங்கள் மற்றும் ஏனைய இடை நிலைப் பொருட்களின் உயர்ந்த இறக்குமதிகளே பெருமளவிற்குக் காரணமாகும். பெற்றோலிய உற்பத்திகளின் இறக்குமதி நீங்கலான இடைநிலைப் பொருட்கள் 2000ஆம் ஆண்டில் 13 சதவீதத்தினால் அதிகரித்தன.

▲ 2000ஆம் ஆண்டில் முதலீட்டுப் பொருட்கள் 11 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும், 2000ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட வானூர்தி நீங்கலான முதலீட்டுப் பொருட்கள் 14 சதவீதத்தினால் அதிகரித்து பொறிகள் மற்றும் கருவிகள் (16 சதவீதம்) கட்டடப் பொருட்கள் (17 சதவீதம்) என்பனவற்றின் உயர்ந்த வளர்ச்சியைப் பிரதிபலித்தன.

▲ யப்பான் இலங்கைக்கான தனிப் பெரும் ஏற்றுமதியாளராக தொடர்ந்தும் விளங்கியதுடன் (10 சதவீதம்) அதனைத் தொடர்ந்து இந்தியாவும் (9.5 சதவீதம்) கொங்கொங்கும் (8 சதவீதம்) காணப்பட்டன.

## வர்த்தக நிலுவை

▲ 2000ஆம் ஆண்டில் வர்த்தகப் பற்றாக் குறையானது 1999இன் ஐ.அ.டொலர் 1,369 மில்லியன் கொண்ட பற்றாக் குறையுடன் ஒப்பிடுகையில் ஐ.அ. டொலர் 1,798 மில்லியனுக்கு விரிவடைந்தது. இரண்டு ஆண்டுகளினதும் வானூர்தி இறக்குமதிகளை நீக்கி விடுமிடத்து வர்த்தகப் பற்றாக்குறை 1999இன் ஐ.அ.டொலர் 1,072 மில்லியனுக்கெதிராக 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 1,500 மில்லியனாக விளங்கியது.

## சுற்றுலா

▲ 2000ஆம் ஆண்டில் சுற்றுலா வருகைகள் 400,414 ஆக அமைந்து முன்னைய ஆண்டினைவிட 8 சதவீதம் குறைவாக இருந்தது. இதற்கு நாட்டில் காணப்படும் நிச்சயமற்ற பாதுகாப்பு நிலைமைகளே காரணமாகும்.

▲ சுற்றுலாவிலிருந்தான மொத்த வருவாய்கள் 1999இன் ஐ.அ.டொலர்கள் 274 மில்லியனிலிருந்து 2000ஆம் ஆண்டில் ஐ.அ.டொலர் 252 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன.